# 1

# அகத்திணையியல்

## உள்ளடக்கம்


- அகப்பொருளில் ஏழு திணை *(1)*
    - கைக்கிளை - ஐந்திணை - பெருந்திணை
- ஐந்திணைகளின் பெயர்கள் *(6)*
    - குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல்
- ஐந்திணைக்கும் உரிய பொருட்கள் *(7)*
- முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள்
- முதற்பொருள் *(8-18)*
    - நிலம், பொழுது
- கருப்பொருள் *(19-24)*
    - *1.* தெய்வம் முதலியன
- உரிப்பொருள் *(25)*
    - புணர்தல், பிரிதல், இருத்தல், ஊடல், இரங்கல்
- கைகோள் *(26)*
- களவு ஒழுக்கத்தில் புணர்ச்சி வகைகள் *(27)*
- கைக்கிளை *(28-31)*
- இயற்கைப் புணர்ச்சி *(32-36)*
    - கள்ளப் புணர்ச்சி, உள்ளப் புணர்ச்சி
    - மெய்யுறு புணர்ச்சி நிகழும் காலம்
- குறி : பகற்குறி - இரவுக்குறி *(37-38)*
- களவொழுக்கத்தில் நிகழும் பிரிவுகள் *(39-41)*
- வரைவு நிகழும் காலம் *(42-46)*
- அறத்தொடு நிற்றல் *(47-54)*
    - தலைவி, பாங்கி, செவிலி, நற்றாய்
- கற்பு *(55-59)*
- களவிற் புணர்ச்சிக்குரிய மகளிர் *(60 - 61)*
- கற்புக் காலத்தில் நிகழும் பிரிவுகள் *(62 - 66)*

- ஓதல், காவல், தூது; துணை; பொருள், பரத்தையர் தலைவியின் ஊடல், தணிக்கும் வாயில்கள் - துணை மாந்தர்கள் ஊடல் தணிக்கும் வாயில் (68)
  - ஊடல் தணிக்கும் வாயில் (68)
  - 1. பாணன், 2. பாடினி, 3. கூத்தர், 4. இளையோர், 5. கண்டோர், 6,7. பாங்கன் 8. பாகன், 9. பாங்கி, 10. செவிலி, 11. அறிவர், 12. காமக்கிழத்தி, 13. காதல் புதல்வன், 14.விருந்தினர், 15.ஆற்றாமை (69-81)
- குலமகளிரோடு செல்ல ஆகாத இடங்கள் (85)
- செலவழுங்குதல் (86-88)
  - இல்லத்தில், இடைச்சுரத்தில்
- பிரிவிற்குக் காலம். (89-91)
- கற்புக் காலத்துத் தலைமகளுக்கு உரிய ஒழுகலாறு (94)
- வாயில்கள் - உரியோர் செயல்கள் (95-106)
  - பாணன், விறலி, கூத்தர், இளையோர், கண்டோர், பாங்கர், பாங்கி.
- காதற்பரத்தையர், பரத்தையர், காமக் கிழத்தியர். (113-115)
- உரிமைகள் (109-112)
  - தோழி, செவிலி, அறிவர்
- தலைவன், தலைவியின் துறவறம் (116)

# 1

# அகத்திணையியல்

அகத்திணையியல் அகவாழ்விற்கான அடிப்படைகளைத் தொகுத்து விளக்கும் இயலாகும். இதனை அடுத்து வரும், 2.களவியல், 3.வரைவியல், 4.கற்பியல், 5. ஒழிபியல் போன்ற இயல்களுக்கு மூலக் கூறுகளை அகத்திணையியல் விளக்குகின்றது.


முதற்பொருளாகிய நிலம், பொழுது, கருப்பொருளாகிய மக்கள், மற்ற உயிரினம், பொருள்கள் உரிப்பொருளாகிய ஒழுகலாறு போன்ற அடிப்படைகள் அகத்திணையியலில் விளக்கப்பட்டுள்ளன.

அகவாழ்வில் வரும் தலைவன், தலைவி, உள்ளிட்ட அனைத்து மாந்தர்கள், அவர்களுக்குரிய செயற்பாடுகள் போன்றவை அகத்திணையியலில் விளக்கப்பட்டுள்ளன.

## அகப்பொருளில் ஏழுதிணை

1. **மலர்தலை உலகத்துப் புலவோர் ஆய்ந்த**
**அருந்தமிழ் அகப்பொருள் கைக்கிளை ஐந்திணை**
**பெருந்திணை எனஎழு பெற்றித்து ஆகும்.**

பரந்தகன்ற தமிழ்கூறு நல்லுலகின் ஆற்றல் மிக்க புலவர்கள் அகப்பொருளைக் கைக்கிளை (1), ஐந்திணை (5), பெருந்திணை (1) என ஏழுவகையாகப் பாகுபாடு செய்வர்




இப்பாகுபாடு தொல்காப்பியத்தை அடியொற்றிச் செய்யப்பட்டது என்பதைப் பின்வரும் நூற்பாவால் அறியலாம்.

**கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்**
**முற்படக் கிளந்த எழுதிணை என்ப** **(தொல்.பொருள். 1)**

முன்னோர் நூலைப் பொன்னே போல் போற்றி இந்நூல் யாக்கப்பட்டுள்ளது என்பதற்கு இதுவே சான்றாகும்.

(சிலப்.11:...)

பாலை என்பதோர் படிவ...

(6)

## ஐந்திணைக்கும் உரிய பொருட்கள்

7. அவைதாம்,

முதற்பொருள் கருப்பொருள் உரிப்பொருள் எனமுறை
நுதற்பொருள் மூன்றினும் நுவலப் படுமே.

மேற்குறிக்கப் பெற்ற குறிஞ்சி முதலாகிய ஐவகை நிலங்களுக்கும் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் எனப் பொருட்கள் மூன்று வகையில் அமையும்.

முதல்கரு உரிப்பொருள் என்ற மூன்றே
நுவலுங் காலை முறைசிறந் தனவே
பாடலுள் பயின்றவை நாடுங்காலை

(தொல்.பொருள்.3)

எனத் தொல்காப்பியரும் குறிப்பிடுகின்றார்.

எனத் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார். (தொல்.பொ

## நிலமாகிய முதற்பொருளின் வகை

9. வரையே சுரமே புறவே பழனம்
திரையே அவையவை சேர்தரும் இடனே
எனாஅர் ஐவகைத்து அனையியல் நிலமே.

வரை எனப்படும் மலையும் சுரம் எனப்படும் வறண்ட நி
புறவு எனப்படும் காடும் பழனம் எனப்படும் வயலும் திரை எனப்
கடலும் அவை சார்ந்த இடமும் என முதற் பொருள்களுள் ஒன்றா
நிலம் பத்து வகையில் அடங்கும்.

| | | |
|---|---|---|
| 1. வரை | : | மலையும் |
| 2. | | மலை சார்ந்த இடமும் - குறிஞ்சி |
| 3. சுரம் | : | வறண்ட நிலமும் |
| 4. | | அது சார்ந்த இடமும் - பாலை |
| 5. புறவு | : | காடும் |
| 6. | | காடு சார்ந்த இடமும் - முல்லை |
| 7. பழனம் | : | வயலும் |
| 8. | | வயல் சார்ந்த இடமும் - மருதம் |
| 9. திரை | : | கடலும் |
| 10. | | கடல் சார்ந்த இடமும் - நெய்தல் |

இவ்வாறு ஐவகை நிலமும் அவை சார்ந்த இடமும் பத்து வகையாகப் பகுக்கப்பட்டுள்ளன.

சிறுபொழுது என்றும் இ

**பெரும்பொழுதின் வகை**

11. காரே கூதிர் முன்பனி பின்பனி
சீரிள வேனில் வேனில் என்றாங்கு
இருமூன்று திறத்தது தெரிபெரும் பொழுதே.

கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என ஓர் ஆண்டாகிய பெரும்பொழுதை ஆறுவகையாகப் பகுப்பர்.

பெரும்பொழுதின் ஒவ்வொரு வகைக்கும் ஆண்டின் பன்னிரண்டு மாதங்களும் இரண்டிரண்டாகக் கணக்கிடப்படும்.

| | | |
|---|---|---|
| 1. கார் காலம் | : | ஆவணி, புரட்டாசி |
| 2. கூதிர் காலம் | : | ஐப்பசி, கார்த்திகை |
| 3. முன்பனிக் காலம் | : | மார்கழி, தை |
| 4. பின்பனிக் காலம் | : | மாசி, பங்குனி |
| 5. இளவேனிற் காலம் | : | சித்திரை, வைகாசி |
| 6. முதுவேனிற் காலம் | : | ஆனி, ஆடி |

(11)

**சிறுபொழுதின் வகை**

12. மாலை யாமம் வைகறை எற்படு
காலை வெங்கதிர் காயும்நண் பகலெனக்
கைவகைச் சிறுபொழுது ஐவகைத் தாகும்.

மாலை, யாமம் (நடுயாமம்), வைகறை, எற்படுகாலை, நண்பகல் என ஒரு நாள் ஐந்து சிறுபொழுதுகளாகக் கணக்கிடப் படும்.

ஒரு நாளின் 60 நாழிகைகளுள் ஒவ்வொரு சிறுபொழுதும் 10 நாழிகை அளவு பெறும். இச்சிறு பொழுதுகள் ஞாயிறு மறையத் தொடங்கிய நேரம் தொட்டு மறுநாள் ஞாயிறு தோன்றி மறையும் மாலை வரை நேரம் கணக்கிட்டுக் கொள்ளப்படும்.

| | | |
|---|---|---|
| **மாலை** | : | **பிற்பகல் 2 மணி முதல் இரவு 10 மணி வரை** |
| **யாமம்** | : | **இரவு 10 மணி முதல் 2 மணி வரை** |
| **வைகறை** | : | **இரவு 2 மணி முதல் காலை 6 மணி வரை** |
| **எற்பாடு காலை** | : | **காலை 6 மணி முதல் முற்பகல் 10 மணி வரை** |
| **நண்பகல்** | : | **நண்பகல் 10 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை** |

(இல.விள.385)

(12)

## குறிஞ்சியின் கருப்பொருள்

20. விறல்சேய் பொருப்பன் வெற்பன் சிலம்பன்
குறித்தி கொடிச்சி குறவர் கானவர்
குறத்தியர் கிளிமயில் மறப்புலி குடர்வடி
கறையடி சீயம் சிறுகுடி அருவி
நறுஞ்சுனை வேங்கை குறிஞ்சி காந்தள்
ஆரம் தேக்குஅகில் அசோகம் நாகம்
வேரல் ஐவனம் தோரை ஏனல்
கறங்கிசைத் தொண்டகம் குறிஞ்சியாழ் குறிஞ்சி
வெறிகோள் ஐவனம் வித்தல் செறிகுரல்
பைந்தினை காத்தல் செந்தேன் அழித்தல்
செழுங்கிழங்கு அகழ்தல் முழங்கிவீழ் அருவியொடு
கொழுஞ்சுனை ஆடல் குறிஞ்சிக் கருப்பொருளே.

| | |
|---|---|
| 1. தெய்வம் | சேய் (முருகன்) |
| 2. உயர்ந்தோர் | பொருப்பன், வெற்பன், சிலம்பன், குறத்தி, கொடிச்சி. |
| 3. அல்லோர் (உழைப்போர்) | குறவர், கானவர், குறத்தியர். |
| 4. புள் | கிளி, மயில். |
| 5. விலங்கு | புலி, கரடி, யானை, சிங்கம். |
| 6. ஊர் | சிறுகுடி. |
| 7. நீர் | அருவி நீர், சுனை நீர். |
| 8. பூ | வேங்கைப்பூ, குறிஞ்சிப்பூ, காந்தள் பூ. |
| 9. மரம் | சந்தனம், தேக்கு, அகில், அசோகு, நாகம், மூங்கில். |
| 10. உணவு | மலை நெல், மூங்கிலரிசி, தினை. |
| 11. பறை | தொண்டகப்பறை. |
| 12. யாழ் | குறிஞ்சி யாழ். |
| 13. பண் | குறிஞ்சிப் பண். |
| 14. தொழில் | வெறியாடல், மலைநெல் விதைத்தல், தினை காத்தல், தேன் எடுத்தல், கிழங்கு எடுத்தல், அருவி நீராடல், சுனை நீராடல். |

குறிஞ்சி முதலாகிய ஐவகை நிலங்களுக்கும் புணர்தல், பி இருத்தல், ஊடல், இரங்கல் என்பவையும் இவற்றின் நிமித்தமும் உரிப்பொருள் பத்து வகைப்படும்.

| | | |
|---|---|---|
| 1. புணர்தலும் 2. புணர்தல் நிமுத்தமும் | - | குறிஞ்சி |
| 3. பிரிதலும் 4. பிரிதல் நிமித்தமும் | - | பாலை |
| 5. இருத்தலும் 6. இருத்தல் நிமித்தமும் | - | முல்லை |
| 7. ஊடலும் 8. ஊடல் நிமித்தமும் | - | மருதம் |
| 9. இரங்கலும் 10. இரங்கல் நிமித்தமும் | - | நெய்தல் |

குறிஞ்சி நிலத்தில் சந்தித்துக் கருத்து ஒருமித்த தலைவ தலைவியும் கூடி மகிழ்தல் **புணர்தல்** ஆகும். தலைவியை விட் தலைவன் பிரிந்திருப்பது **பிரிதல்** ஆகும். தலைவன் பிரிந்து சென்றப அவனை நினைத்து பொறுத்திருப்பது **இருத்தல்** ஆகும். தலைவ பரத்தையரிடம் சென்றதால் தலைவி கொள்ளும் மனவேறுபாடு **ஊட** ஆகும். தன்னைப் பிரிந்து சென்ற தலைவனை எண்ணி வருந்தி இருப் **இரங்கல்** ஆகும். இவற்றைத் தொல்காப்பியர் பின்வருமாறு தொகுத் கூறுவார்.

### மீண்டு வரைதலின் வகை

46. அவள்மனை வரைதலும் தன்மனை வரைதலும்
எனமீண்டு வரைதல் இருவகைத் தாகும்.

1. தலைவியுடன் உடன்போக்குச் சென்ற தலைவன் திரும்பி வந்து தலைவியின் இல்லத்தில் வரைதல்,

2.தலைவன் தன் இல்லத்தில் வரைதல்.

என இருவகைப்படும்.

(46)

### அறத்தொடுநிலை நிகழும் இடம்

தலைவனும் தலைவியும் களவு வாழ்க்கையை மேற்கொண்டிருக்கும்போது நிலமையை எடுத்துக் கூறுதல் அறத்தொடு நிலை எனப்படும்.

47. ஆற்று ஊறஞ்சினும் அவன்வரைவு மறுப்பினும்
வேற்றுவரைவு நேரினும் காப்புக்கை மிகினும்
ஆற்றுறத் தோன்றும் அறத்தொடு நிலையே.

களவொழுக்கத்தின் பொருட்டுப் பகற் குறியிலும் இரவுக் குறியிலும் தலைவன் வரும் வழியில் அடையும் இடையூறுகளை நினைந்தும் தலைவனுக்குத் தலைவியைக் கொடுக்க இல்லத்தவர் மறுக்கும் நிலையிலும் பிறர், தலைவியைப் பெண்கேட்க வரும் நிலையிலும் தலைவியின் களவொழுக்கத்தைத் தடுக்கக் காவல் மிகும் போதும் தலைவி தன்னுடைய நிலையைக் கூறி அறத்தொடு நிற்பாள்.

**அறம் என்பது தக்கது; தக்கதனைச் சொல்லி நிற்றல்.... என்றவாறு; அல்லதூஉம் பெண்டிர்க்கு அறம் என்பது கற்பு, கற்பின் தலைநிற்றல் என்பதூஉமாம்.**

**(இறை.கள.29.உரை)**

களவொழுக்கத்திலேயே காலத்தை நீட்டிக்க முடியாத சூழல் வரும்போது தலைவியுடனான தன் உறவைக் கூறி அடுத்துக் கற்பு வாழ்க்கைக்குத் தலைவி வழிவகை செய்து கொள்வதே அறத்தொடு நிற்றலாகும். இறையனார் களவியல்,

**காப்புக் கைமிக்குக் காமம் பெருகினும்**
**நொதுமலர் வரையும் பருவம் ஆயினும்**
**வரைவெதிர் கொள்ளாது தமர்அவண் மறுப்பினும்**
**அவன்ஊறு அஞ்சுங் காலம் ஆயினும்**
**அந்நால் இடத்தும் மெய்ந்நாண் ஒரீஇ**
**அறத்தொடு நிற்றல் தோழிக்கும் உரித்தே** **(இறை. கள.29)**

எனத் தோழி அறத்தொடு நிற்றலுக்கான காரணங்களைக் குறிப்பிடுகின்றது.

வாழ்க்கைக்குப் புக எண்ணும்போது ... காரணங்களால் உடன் போக்கில் ஈடுபடுவர். அதனை ... மகன்களுக்கும் என செவிலிக்கும் செவிலி நற்றாய்க்கும் நாற்றாய் கணவன் முறையாகக் கூறி அறத்தொடு நிற்பர்.

(54)

**கற்பு**

கற்பு வாழ்க்கை எனப்படும் இல்லற வாழ்க்கை களவு வாழ்க்கைக்குப் பிறகு அமையக் கூடியதாகும். தலைவனும் தலைவியும் இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டுப் பல்வேறு கடமைகளைச் செய்வது கற்பு வாழ்க்கையிலாகும்.

**அறவோர்க்கு அளித்தலும் அந்தணர் ஓம்பலும்**
**துறவோர்க்கு எதிர்தலும் தொல்லோர் சிறப்பின்**
**விருந்தெதிர் கோடலும்....** **(சிலப்.16:71-73)**

எனச் சிலப்பதிகாரம் இல்லற வாழ்க்கையின் கடமைகளை நினைவு கூர்கின்றது. பலரையும் பாதுகாத்து அன்பு செலுத்துவது தலைவன் - தலைவியின் முதற்கடமை ஆகும்.

**கற்பின் வகை**

55. **களவின் வழிவந்த கற்பும் பொற்பமை**
**களவின் வழிவாராக் கற்புமென் றாங்கு**
**முற்படக் கிளந்த கற்புஇரு வகைத்தே.**

களவின் வழியாக அமைந்த இல்லற வாழ்க்கை, களவால் வாராத இல்லற வாழ்க்கை என கற்பின் வாழ்க்கை இருவகையில் அமையும்.

இவற்றில் களவின்வழி வந்த கற்பு வாழ்க்கையே சிறந்தது என்பதனால் அகப்பொருள் விளக்க ஆசிரியர் இதனை முதலில் குறிப்பிடுகின்றார். களவின்வழி அமையும் கற்பு வாழ்க்கையே சிறப்புடையது என்பதை,

**முற்படப் புணராத சொல் இன்மையின்**
**கற்பெனப் படுவது களவின் வழித்தே** **(இறை.கள.15)**

என இறையனார் களவியல் குறிப்பிடும்.

(55)

61. ஒழிந்தோர் மன்றல் புணர்ச்சிக்கு உரியர்.

காமக் கிழத்தியரும் பின்முறை வதுவைப் பெருங்கு கிழத்தியரும் மன்றல் புணர்ச்சியாகிய வதுவைப் புணர்ச்சி உரியவராவர்.

## கற்புக் காலத்தில் நிகழும் பிரிவுகள்

62. பரத்தையின் பிரிதல் ஓதற்குப் படர்தல்
அருள்தரு காவலொடு தூதிற்கு அகறல்
உதவிக்கு ஏகல் நிதியிற்கு இகத்தலென்று
உறைபெறு கற்பின் பிரிவுஅறு வகைத்தே.

தலைவியுடன் கற்பு வாழ்க்கை என்னும் இல்லற வாழ்க்கை ஈடுபட்டிருக்கும் தலைவனுக்கு ஆறுவகையான பிரிவுகள் ஏற்படுகின்ற

1. பரத்தையிற் பிரிவு
2. ஓதற் பிரிவு
3. காவற்பிரிவு
4. தூதின் பிரிவு
5. துணைக்காகப் பிரிவு
6. பொருள் தேடப்பிரிவு

### 1. பரத்தையிற் பிரிவு

தலைவியோடு இல்லற வாழ்வு நடத்திக் கொண்டிருக்கும் தலை பரத்தையின்பால் காதல் கொண்டு சேரிக்குச் செல்வான். தலைவி பிரிந்து பரத்தையிடம் உறவாடச் செல்வது பரத்தையிற் பிரிவாகும்.

### 1.1 பரத்தையிற் பிரிவின் வகைகள்

63. அயல்மனைப் பிரிவு அயல்சேரியின் அகற்சி
புறநகர்ப் போக்குஇவை புரவலர்க்கு உரிய
பரத்தையிற் பிரியும் பருவத் தான.

தூதிற்காகவும் உதவிக்காகவும் தலைவியைப் பிரிந்து சென்று தங்கி இருக்கும் காலம் ஓராண்டாகும். அக்காலத்திற்குள் அவ்வினைகள் முடியாது காலம் நீட்டித்தால் தலைவன் அவன் தங்கி இருக்கும் பாசறையில் இருந்தபடியே தலைவியை நினைத்துப் புலம்புவான்.

(93

## கற்புக் காலத்துத் தலைமகளுக்கு உரிய ஒழுகலாறுகள்

94. பூத்தமை சேடியின் புரவலர்க்கு உணர்த்தலும்
நீத்தமை பொறாது நின்றுகிழ வோனைப்
பழிக்கும் காமக் கிழத்தியைக் கழறலும்
கிழவோன் கழறலும் வழிமுறை மனைவியைக்
கொழுநனொடு வந்தெதிர் கோடலும் அவனொடு
பாங்கொடு பரத்தையைப் பழித்தலும் நீங்கிப்
புறநகர்க் கணவனொடு போகிச் செறிமலர்ச்

மாலைவெ... யாடலும் கரு...
கண்டுவிளை யாடலும் கரு...
வண்டிமிர் கமல வாவியும் குளனும்
ஆடிவிளை யாடலும் கூடும் கிழத்திக்கு.

1. கற்புக் காலத்தில் தலைவி பூப்பெய்தியவழி அச்செய்தியை செவ்வணி அணிந்த தோழி வாயிலாகக் காமக் கிழத்தியது இல்லத்தில் இருக்கும் தலைவனுக்குத் தெரிவிப்பாள்.
2. தலைவன் தலைவியைக் குறித்துக் காமக் கிழத்தியை நீங்கி வரிடின் அது பொறாது பழிதூற்றும் அவளைத் தலைவி ஏசுவாள்.
3. தலைவனது புறத்தொழுக்கம் குறித்து அவனையும் இடித்துரைப்பாள்.
4. தலைவன் மணந்த இரண்டாம் மனைவியை அவனோடு எதிர்கொண்டு அழைத்து உபசரிப்பாள்.
5. இரண்டு மனைவியையும் ஏனைய தோழி, பாங்கன் போன்ற துணைவரையும் தன் பக்கம் கொண்டு பரத்தையை ஏசுவாள்.
6. கணவனோடு ஊர்ப்புறத்தே புறப்பட்டுச் சென்று சோலையும் வயலும் அருவியும் மலையும் காடும் கண்டு மகிழ்ந்து விளையாடுவாள்.
7. ஆற்றிலும் ஓடையிலும் குளத்திலும் அவனொடு கூடி விளையாடுவாள். (94)

## வாயில்களுள் பாணர்க்கு உரிய செயல்

95. வாயில் வேண்டலும் வாயில்நேர் வித்தலும்
சேயிழை ஊடல் தீர்த்தலும் போயுழி
அவள்நலம் தொலைவுகண்டு அழுங்கலும் அவன்வயின்
செல்ல விரும்பலும் சென்றுஅவற்கு உணர்த்தலும்
சொல்லிய கூற்றெனச் சொல்லுங் கிழவோன்
வரவு மீண்டுவந்து அரிவைக்கு உணர்த்தலும்
அணிநலம் பெற்றமை அறியான் போன்றுஅவள்
பணிவொடு வினாதலும் பாணற்கு உரிய.

1. தலைவனுக்காகத் தலைவியிடம் வாயில் வேண்டுவது.
2. தலைவனுக்கு வாயில் அமைத்துத் தருவது.
3. தலைவியின் ஊடலைத் தீர்த்து வைப்பது.
4. தலைவனைப் பிரிந்த தலைவியின் மெலிவு கண்டு வருந்துவது.

5. தலைவனிடம் மீண்டும் செல்வது.
6. தலைவனிடம் தலைவியின் நிலையைக் கூறுவது.
7. தலைவனிடம் தலைவி கூறியவற்றைக் கூறுவது.
8. பரத்தையிடமிருந்து பிரிந்து தலைவியைக் காணத் தலைவன் வருவதைக் கூறுவது.
9. தலைவன் வரப்போவது கண்டு மகிழ்ந்திருக்கும் தலைவியை அஃது அறியாதவன் போல வினவுவது.

என இவை எல்லாம் பாணர்க்கு உரிய செயல்கள் ஆகும்.

(95)

### விறலிக்கு உரிய செயல்

96. செலவில் தேற்றலும் புலவியில் தணித்தலும்
வாயில் வேண்டலும் வாயில்நேர் வித்தலும்
தெரியிழை விறலிக்கு உரிய வாகும்.

1. தலைவன் தலைவியைப் பிரிந்து சென்றபிறகு அவளுக்கு நன்மொழி கூறி ஆற்றுப் படுத்துவது.
2. தலைவன் திரும்பியபிறகு தலைவியின் ஊடலைத் தணிப்பது.
3. தலைவியிடம் வாயில் வேண்டுவது.
4. வாயில் நேர்வித்துக் கொடுப்பது.

போன்றவை விறலிக்குரிய கடமைகளாகும்.

விறலி என்பவள் தலைவன், தலைவிக்குத் தோழி போன்றவள். தலைவியின் ஊடலையும் தீர்த்து வைப்பாள். தலைவியோடு தலைவனைச் சேர்த்து வைக்க வாயிலாகவும் திகழ்வாள். ஆடல், பாடல் என்னும் இருகலைகளிலும் தேர்ந்தவள். விறலியை வாயில் வேண்டுபவளாக வைத்துப் பிற்காலத்தில் நிறைய **விறலி விடுதூது** என்னும் சிற்றிலக்கிய நூல்கள் தோன்றியுள்ளன.

(96)

### கூத்தர்க்கு உரிய செயல்

97. செல்வம் வாழ்த்தலும் நல்லறிவு கொளுத்தலும்
கலனணிபு உணர்த்தலும் காமநுகர்ப்பு உணர்த்தலும்
புலவிமுதிர் காலைப் புலங்கொள ஏதுவிற்
தேற்றலும் சேய்மை செப்பலும் பாசறை
மேற்சென்று உரைத்தலும் மீண்டுவரவு உணர்த்தலும்
கூற்றிரு மரபின் கூத்தர்க்கு உரிய.

1. தலைவன், தலைவியின் செல்வம் மேலும் பெருக வாழ்த்துவது.
2. வாழ்வுக்குத் தேவையான நல்லறிவைப் புகட்டுவது.
3. நல்ல உடைகளையும் அணிகலன்களையும் அணிய அறிவுறுத்துவது.
4. காம நுகர்ச்சி பற்றிய நுட்பங்களை விளக்குவது.

5. ஊடலால் தலைவனின் மனநிலை அடையும் மாற்றத்தையும் அதன் விளைவையும் கூறுவது.
6. தலைவன் பிரிந்து சென்று இருக்கும் இடத்தைப் பற்றிக் கூறுவது.
7. தலைவியின் நிலை குறித்துப் பாசறைக்குச் சென்று விளக்குவது.

என்பவை அனுபவம் வாய்ந்த கூத்தரின் செயல்களாகும்.

**கூத்தர்**

நாடகசாலையார். பண்டைக் காலம்தொட்டு வருகின்ற நன்றும் தீதும் பற்றித் தாம் கற்றறிந்தவற்றை நாடகங்களை அவைக்கு வந்தோர்க்கு எல்லாம் நடித்துக் காட்டும் தொழிலை உடையவர்.

(தமிழ் இல.பேர.2-31)

**இளையோர்க்கு உரியசெயல்** (97)

**இளையோர் என்போர்**

உழையிருந்து குற்றேவல் புரிதலும் காவல் புரிதலும் உயர்ந்தோர் ஒழுக்கமாகிய நன்னடைத்தையும் எல்லாம் இளையோர்க்கு உரியனவாம். இளையோர் எனப்படுவோர் தலைவனின் தந்தைக்குக் காமக் கிழத்தியர்வழிப் பிறந்தவரும் சிறுபான்மை பிறருமாவர். அம்முறையில் உடன் பிறப்பன்ன உரிமை பூண்டொழுகுவர்.

(அக.கலை.பக்.56-57)

98. மடந்தையை வாயில் வேண்டலும் வாயில்
உடன்படுத்தலும் அவள் ஊடல் தீர்த்தலும்
கொற்றவற்கு உணர்த்தலும் குற்றேவல் செய்தலும்
சென்று முன்வரவு செப்பலும் அவன்திறம்
ஒன்றிநின்று உரைத்தலும் வினைமுடிபு உரைத்தலும்
வழியியல்பு கூறலும் வழியிடைக் கண்டன
மொழிதலும் இளையோர் தொழிலென மொழிப.

1. ஊடியிருக்கும் தலைவியிடம் சென்று வாயிலை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுவது.
2. வாயில் அமைத்துக் கொடுப்பது.
3. தலைவியின் ஊடலைத் தீர்த்து வைப்பது.
4. கொற்றவனாகிய தலைவனுக்கு ஊடல் நீங்கிய தலைவியின் நிலையை எடுத்துரைப்பது.
5. தலைவன், தலைவி இருவர்க்கும் குற்றேவல் செய்வது.
6. தலைவனின் வருகையைத் தலைவியிடம் சென்று கூறுவது.
7. தலைவனுக்காக அவனுடைய நிலமையைத் தலைவியிடம் எடுத்துக் கூறுவது.